For all Ceremonies
At your homes
Our Service available

**OLI ILLAM**

210, MAIN STREET,
(Near St. Junes Church)
JAFFNA.

பக்கங்கள்: நான்கு ATS Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

தகரப் பந்தல், கதிரைகள், சில்வர் கப், பீங்கான் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்

"ஒலி இல்லம்"

210, பிரதான வீதி,
(யாகப்பர் ஆலய மருங்கில்)
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 20 செவ்வாய்க்கிழமை (04– 01 – 1994) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 39

எம்பிலிப்பிட்டியாவில் கைதாகி பின் காணாமற்போன

# 32 மாணவரில் பலரின் எலும்புக் கூடுகள்

# இராணுவக் காவல் அரண் பகுதியில் மீட்பு!

## சாரம் அடையாளம் காணப்பட்டது

காணாமல் போன மாணவன் ஒருவனின் தந்தை புதை குழியிலிருந்து மீட்கப்பட்ட சாரம் ஒன்று தனது மகன் காணாமல் போன அன்று அணிந்திருந்தது என அடையாளம் காட்டியுள்ளார்.

காணாமற்போன மாணவர்களின் பெற்றோர்கள் பலரும் நேற்று சூரியகந்தவில் கூடியிருந்தனர்.

## 16 பேரின் எலும்புக்கூடுகள் இதுவரை மீட்கப்பட்டன

### பிக்குவின் அங்கியும் கிடந்தது

சூரியகந்த காட்டுப் பகுதியில் தோண்டப்பட்ட நிலப் பகுதியில் இதுவரை 16 பேரின் எச்சங்கள் மீட்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது

சுமார் 40 மீற்றர் சுற்றளவில் இரு இடங்களில் தோண்டியபோது முதலில் மூன்று மண்டை ஓடுகளும் பல மனித எலும்புகளும் புத்த பிக்கு ஒருவரின் அங்கியும் சுமார் 4 அடி ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

தோண்டத் தொடங்கி ஒரு மணித்தியாலத்துக்குள் பல சடலங்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால் அப்பகுதியில் மேலும் பல சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

பயன்படுத்தப்பட்ட பல துப்பாக்கி ரவைகள், துணிக்கந்தல்கள் மற்றும் செருப்புகள், பாடசாலை மாணவர்களின் இற்றுப்போன பாடசாலைச் சீருடைகள் என்பனவும் நிலத்துக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

## பொலீஸார்-பத்திரிகையாளர் முன்பாகத் தோண்டி எடுப்பு

கொழும்பு, ஜனவரி 4

1989 ஆம் ஆண்டு – ஜே. வி. பி. கிளர்ச்சிக் காலத்தில் அரச சார்புடைய பயங்கரவாத அதிரடிப் படைகளால் எம்பிலிப்பிட்டியப் பகுதியில் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமற் போனதாகக் கூறப்படும் 32 மாணவர்களில் பலரின் எலும்புக் கூடுகளும் மண்டை ஓடுகளும் இரத்தினபுரிக் காட்டுப் பகுதியில் மீட்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது,

இரத்தினபுரிக் காட்டுப் பகுதியில் – ஜே வி. பி. கிளர்ச்சிக் காலத்தில் – இராணுவ முகாம் மற்றும் காவலரண்கள் அமைந்திருந்த இடத்திலேயே நிலத்துக்குள்ளிருந்து எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன,

உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்கள், மற்றும் பொலீஸார் முன்னிலையில் இந்த எலும்புக் கூடுகள் நேற்று தோண்டி எடுக்கப்பட்டன.

எலும்புக் கூடுகளை மீட்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

இரத்தினபுரிப் பிரதேசத்தில் கொலன்ன தொகுதியில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் எல்லைப் புறத்தில் மலை ஒன்றிலேயே இந்த எலும்புக் கூடுகள் புதைக்கப்பட்டிருந்தன.

சூரியகந்த எனப்படும் இந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## சு.கவின் ஏற்பாட்டிலேயே எலும்புக் கூடுகள் மீட்பு பணி!

சூரியகந்தப் பகுதியில் நிலத்திலிருந்து எலும்புக் கூடுகளைத் தோண்டி எடுக்கும் நடவடிக்கையை ஸ்ரீ. ல. சு. கவினரே முன்னின்று செய்வித்து வருகின்றனர்.

மேல் மாகாண சபையின் முதலமைச்சரும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மகளுமான சந்திரிகா குமாரணதுங்க தலைமையில் சு. கவினரே உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்களையும், பொலீஸாரையும் நேற்று சம்பந்தப்பட்ட இடத்துக்குக் கூட்டிச் சென்றனர்.

சு. க. தொண்டர்களே நிலத்தைத் தோண்டும் பணியிலும் ஈடுபட்டனர்.

சு.கவின் எம்.பிக்களான டி. எம். ஜயரத்ன, எஸ். பி. திஸாநாயக்கா, மில்ரோய் பெர்னாண்டோ, அநுருத்த ரத்வத்த ஆகியோரும் நேரடியாகச் சம்பந்தப்பட்ட இடத்துக்குச் சென்றிருந்தனர்.

## இருநூறு சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம்

### அரசின் வேலை இது என்கிறார் சந்திரிகா

சூரியகந்தப் பகுதியில் சுமார் இருநூறுக்கும் அதிகமான சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என தாம் நம்புவதாக மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க அப்பகுதியில் வைத்து நேற்று செய்தியாளர்களிடம் சொன்னார்.

கடுமையாகப் பாதுகாக்கப்பட்ட பகுதி இது. இங்கு வேறு எவரும் செல்லமுடியாது. ஆகவே அரசினது அல்லது இராணுவத்தினது அனுமதி இல்லாமல் எவரும் வந்து இந்த இடத்தில் சடலங்களைப் புதைத்திருக்க முடியாது.

''ஆகவே அரசின் அனுமதி பெற்றோரே இங்கு வந்துள்ளனர். ஆகவே இக் கொலைகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்.

''அரசு இது குறித்து நீதியான விசாரணை நடத்த வேண்டும்'' — இப்படி சந்திரிகா அங்குவைத்து கோரிக்கை விடுத்தார்.

## தெற்காசியாவில் 'பெருங்குடி' மக்கள்!

### இலங்கையர் தொடர்ந்து சாதனை

கொழும்பு, ஜன. 4

கடந்த வருடம் இலங்கையர்கள் அருந்திய சாராயத்தின் அளவு — ஏழு கோடி போத்தல்கள்! அதைப்போல இரண்டு மடங்கு கசிப்பையும் அவர்கள் குடித்துத் தள்ளியிருக்கிறார்கள்.

இதன் மூலம் ஆசியப் பிராந்தியத்தில் ''பெருங்குடி மக்கள்'' என்ற பெருமையை அவர்கள் தொடர்ந்து தக்க வைத்திருக்கிறார்கள்.

மேற்படி கணக்கில் ஏனைய குடிவகைகள் சேர்க்கப்படவில்லை.

''இலங்கை வடிசாலை கம்பனி லிமிட்டெட்'' நிறுவனத்தின் சந்தைப்படுத்தும் முகாமையாளரான திரு. றொனால்ட் ருபேரா இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

பியர் மட்டும், ஒரு கோடி ஐந்து லட்சம் லீற்றர் கடந்த வருடம் இலங்கையரால் உட்கொள்ளப்பட்டுள்ளது! (உ)

## யுத்தகால அமைச்சரவை உபகுழு: சிறிமாவும் இடம்பெற வேண்டும்

### ஐந்து முன்னாள் தளபதிகள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 4

ஆயுத படைகளின் முன்னாள் தளபதிகள் ஐவர் கடந்த மாதம் எதிர்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து யுத்தகால அமைச்சரவை உபகுழுவில் எதிர்க்கட்சித் தலைவி என்றமுறையில் அவரும் இடம்பெறம்பெற வேண்டும் என்ற தமது விருப்பத்தை அவரிடம் நேரில் தெரிவித்தனர்.

உத்தியோகபூர்வமாக தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் தாம் அதுபற்றி சிந்திப்பதாக திருமதி பண்டாரநாயக்கா அவர்களிடம் பதிலளித்தார்.

இது குறித்து முன்னாள் தளபதிகள் குழு ஜனாதிபதிக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

லெப்டினன்ட் ஜெனரல் டெனிஸ் பெரேரா, ரியர் அட்மிரல் பேஸில் குணசேகரா, ரியர் அட்மிரல் அல்பிறட் பெரேரா, எயர் வைஸ் மார்ஷல் பத்மன் மென்டிஸ், எயர் வைஸ் மார்ஷல் ஹறி குணதிலக ஆகியோரே இக்குழுவில் உள்ளனர்.

இக்குழு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு முன்னர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவை சந்தித்தது.

யுத்தகால அமைச்சரவை உபகுழு ஒன்றை நிறுவும் யோசனை பற்றியே முக்கியமாக அப்போது விவாதிக்கப்பட்டது. அக்குழுவில் எதிர்க்கட்சித் தலைவரும் இருப்பது நல்லது என்று குழு ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தது. (உ-எ)

## விசாரணை நடத்த நீதிவான் சம்பவ இடத்துக்கு விஜயம்

### பொலீஸாரும் பெருமளவில் குவிப்பு

மாணவர்களின் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டதாகக் கருதப்படும் சூரியகந்த பகுதியில் இரு பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் தலைமையில் மூன்று ட்ரக் நிறைய பொலீஸார் கொண்டு செல்லப்பட்டு அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட செய்தி வெளியானதை அடுத்து எம்பிலிப்பிட்டிய நீதிவான் அங்கு சென்று பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது

## லஞ்ச ஆணையாளர் திடீர் பதவி நீக்கம்!

கொழும்பு, ஜன. 4

லஞ்ச ஆணையாளராகப் பணியாற்றி வந்த திருமதி நெலும் கமகே கடந்த வாரம் திடீரென அப்பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

சில முக்கியஸ்தர்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தி வந்ததற்காகவே அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். என்று சந்தேகிக்கப்படுகிறது.

## பிரிட்டிஷ் மருத்துவ கருவிகள் வாதுவவில்!

யாழ். ஆஸ்பத்திரிக்கு பிரிட்டிஷ் அரசினால் வழங்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள் அடங்கிய 7 கொள்கலன்கள் 'வாதுவ' கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்படவுள்ளன.

கொழும்பு துறைமுகத்தில் தற்சமயம் பொருள்கள் ஏற்றி வரும் ''வாதுவ'' கப்பல் அடுத்த வாரம் வடக்கே புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கப்பலில் மேற்படி மருத்துவ உபகரணங்கள் ஏற்றப்பட்டு வருவதாகவும் அவற்றுடன் தனியாருக்கான பொருள்களும் ஏற்றப்படுவதாகக் கொழும்பில் இருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது. (அ-5)

## அரசியல் தீர்வுக்கு யோசனை: கல்விமான் குழு சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜன. 4

ஓய்வு பெற்ற சிரேஷ்டபாதுகாப்பு அதிகாரிகள், அரச அதிகாரிகள், கல்விமான்கள் மற்றும் தொழில்சார் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு காணப்பட வேண்டிய அரசியல் தீர்வுக்கான யோசனைகள் அடங்கிய அறிக்கை ஒன்றை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவுக்குச் சமர்ப்பித்துள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பாக முன்னாள் தளபதிகள் குழு ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்த சிபார்சுகளுக்கு முரணானவையாக மேற்படி குழு சமர்ப்பித்த யோசனைகள் அமைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பான்மையான சிங்களவர் மற்றும் தமிழர்களி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு ஏற்கனவே தெரிவிப்பு

எம்பிலிப்பிட்டியவிலிருந்து காணாமற் போன மாணவர்கள் கொலை செய்யப்பட்ட பின்னர் சூரியகந்தப் பகுதியில் புதைக்கப்பட்டதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் —

ஆகையினால் இப்பகுதியில் நிலத்தைத் தோண்டி தேடும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்படியும் —

காணாமற்போன மாணவர்களின் பெற்றோர்கள் ஜனாதிபதி விஜேதுங்காவைக் கேட்டிருந்தனர்.

ஆனால் இதற்கு பதில் ஒன்றும் கிடைக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

''ராவய'' பத்திரிகையிலும் இதுபற்றிய செய்திகள் வெளியாகியிருந்தன.

உடனடியாக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியிடமும், சபாநாயகரிடமும் அப்பத்திரிகை கோரியிருந்தது.

ஆனால் அரசுத் தரப்பில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

காணாமற் போனோரின் பெற்றோர்கள் சங்கச் செயலாளரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீரவுக்குக் கிடைத்த தகவல்களை அடுத்தே, திருமதி சந்திரிகா குமாரணதுங்க, எலும்புக் கூடுகளை மீட்கும் பணியை ஒழுங்கு செய்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அரச தரப்பில் மௌனம்

சூரியகந்தவில் மாணவர்களின் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டது பற்றி செய்திகள் தெற்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இவ்வேளையில் அரசு அது குறித்து தொடர்ந்து மௌனம் சாதித்து வருகிறது.

எம்பிலிப்பிட்டிய மகா வித்தியாலயத்திலிருந்து மாணவர்கள் கடத்தப்பட்டது குறித்து ஏற்கனவே விசாரணை நடத்திய மனித உரிமைகளைப் பேணுவதற்கான குழு, இச்சம்பவம் தொடர்பாக எட்டு இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தியிருந்தது.

அரசினால் நியமிக்கப்பட்டிருந்த இக்குழு மாணவர்கள் காணாமற் போனது குறித்து இந்த எட்டு இராணுவத்தினருக்கும் எதிராக முறையான விசாரணையை நடத்தும்படியும் கோரியிருந்தது.

ஆனால் அரசு எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## 3,500 எய்ட்ஸ் நோயாளிகள் நாட்டில் நடமாடுகின்றனர்

கொழும்பு, ஜன-4

அண்மையில் நடத்திய ஆய்வு ஒன்றின்படி நாட்டில் 2 ஆயிரத்து 500க்கும் 3 ஆயிரத்து 500க்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான 'எய்ட்ஸ்' நோயாளர்கள் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர்

'எய்ட்ஸ்' தடுப்பு அமைப்பு ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

எய்ட்ஸ் நோயாளிகளின் அபாயம் கொழும்பில் மட்டுமல்லாது நாடு முழுவதிலும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு 119 எய்ட்ஸ் நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. 1992 இல் இந்த எண்ணிக்கை 76 ஆக இருந்தது. (உ-எ)

## கோமாரியில் ம.எண்ணெய்

யாழ்ப்பாணம், ஜன. 4

சுமார் 4 ஆயிரத்து 500 பரல் மண்ணெண்ணையை கொழும்பு துறைமுகத்தில் வைத்து 'கோமாரி' கப்பலில் ஏற்றும் வேலைகள் நாளை முதல் ஆரம்பமாகும் என யாழ். செயலகத்துக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## கடற்படைக்கு 3 வேகப்படகுகள் கொள்வனவு குறித்து சர்ச்சை

கொழும்பு, ஜன. 4

கடற்படைக்காக மூன்று அதிவேகப் படகுகளை கொள்வனவு செய்வது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வது குறித்து கொழும்பில் சர்ச்சை உருவாகி வருவதாகக் கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் உயர்நிலை அதிகாரிகள் இஸ்ரேல் நிறுவனம் ஒன்றிடமிருந்தே இவற்றைக் கொள்வனவு செய்யவேண்டும் என்று விரும்புகின்றனர்.

இந்த நிறுவனம் ஒரு படகை 39 லட்[illegible] ரம் அமெரிக்க [illegible] விற்க முன்வந்[illegible]

தென்கொரிய நிறுவனம் ஒரு படகை 37 லட்சம் டொலருக்கும், கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் 36 லட்சத்து 60 ஆயிரம் டொலருக்கும் விற்க முன்வந்துள்ளன.

இஸ்ரேலிய படகுகளின் விலை 40 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை இருப்பினும் அவற்றையே வாங்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு மற்றும் கடற்படையில் உள்ள சில சிரேஷ்ட அதிகாரிகள் விரும்புவதாக உயர்நிலை வட்டாரங்களை மேற்கோள் காட்டி பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

ஆழம்குறைந்த நீரில் வேகமாகச் செல்லக்கூடிய — ஆயுதங்கள் பொருத்தப்பட்ட — படகுகளையே கடற்படை விரும்புகிறது. அவை ஒவ்வொன்றும் ''45 நொட்'' வேகத்தில் செல்லக்கூடியவை [illegible] இரண்டு 20 மி.மீ. துப்பாக்கிகள், இரண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



[illegible] எலும்புக் கூட்டினையும் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Dining Table (சாப்பாட்டுமேசையும்) இதற்குரிய குசன் கதிரைகள் ஆறும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். (28755)

### உடன் விற்பனை

ஹைலைன் (Hy-Line) பேட்டுக்குஞ்சுகளும், வளர்ந்த பேட்டுக்குஞ்சுகளும், பிறிமிக்ஸ் வகைகளும் விற்பனைக்குண்டு. திருமகள் ஸ்ரோர்ஸ், 705, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (28756)

### கோழிக்குஞ்சு விற்பனை

ஹைலைன் (Hyline Brown) பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (28742)

### கலண்டர்கள்

தாங்கள் தருகின்ற கலண்டர்களுக்கு தங்கள் வியாபார பெயர் விவரங்களை மலிவாகவும், அழகாகவும் அச்சிட்டு வழங்குவோம். தரமான அச்சு வேலைகளுக்கு தொடர்பு: மஹாலஷ்மி அச்சகம், கொட்டடி, யாழ்ப்பாணம், சுண்டிக்குளி. (6889)

### போட்டோ பிரதிகள்

புதிய இயந்திரம் மூலம் தெளிவான, எல்லா அளவிலும், போட்டோ பிரதி எடுக்க உடனுக்குடன் நாட வேண்டிய இடம்: ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர், மக்மிலன் யாழ்ப்பாணம். (சி-6850)

## சுகாதார அதிகாரிகள் மூவர் கடமை புரிவர்

யாழ்ப்பாணம், ஜன. 4

யாழ். மாநகரசபைப் பகுதிக்கு மூன்று சுகாதார அதிகாரிகளை நியமிக்க வடக்கு-கிழக்கு மாகாணசபை அனுமதி வழங்கியுள்ளது.

தற்சமயம் இங்கு ஒரு சுகாதார அதிகாரியே கடமையாற்றி வருகிறார்.

ஏனைய தரத்தில் உள்ள சுகாதாரப் பரிசோதகர்களையும் கூடுதலாக இப்பதவிக்கு நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஓ-3)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 4

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட அதிபர்கள் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தெரிவித்துள்ளார். (ஓ)

★ ★ ★

தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட அதிபர்கள் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார். (ஓ)

## புதுவித காய்ச்சல் மேலும் இருவர் பலி

தென்மராட்சி, ஜன. 4

தற்போது வேகமாகப் பரவி வரும் புதுவித காய்ச்சலுக்கு தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த மேலும் இருவர் பலியாகினர்.

எழுதுமட்டுவாழ் நாகர் கோவில் வீதியைச் சேர்ந்த சின்னத்துரை அசோக்குமார் (வயது 46) நாவற்குழி மறவன் புலோவைச் சேர்ந்த சபாநாதன் வசந்தாதேவி (வயது 36) ஆகியோரே மரணமானவர்களாவர்.

## திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

புலமைப் பரிசில் 1994 ஆம் ஆண்டுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

கணிதம் — S S பிள்ளை
தமிழ் — திருவாசநாதன்

மாதம் தோறும் பரீட்சை நடைபெறும். (சி-6857)

---

## உடுவில் மகளிர் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

### G. A. Q. - 95 பேராதனை

ஆரம்பம்:- 05 - 01 - 1994 புதன் — 3 மணி

பொருளியல் — திரு. S. வரதராஜன் B A. (Hons)
மெய்யியல் — திரு. S. S. மனோகரன் B. Com
தமிழ் — திரு. S. கணேசலிங்கம் B. A. (Hons)
இந்து நாகரிகம் — திரு. K. பவசிங்கம் B. A. (Hons)
அரசியல் — திரு. K. செல்வரட்ணம் B. A. (Hons)

மேலதிக விவரங்களுக்கு:
பட்டப்படிப்புகள் பிரிவு,
உடுவில் மகளிர் கல்லூரி.

(சி-6903)

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 — 08 — 1939
மறைவு: 09 — 01 — 1980

திதி: 04 - 01 - 1994

### அமரர் நடராசா பாலசுப்பிரமணியம்

(சட்டத்தரணியும், முன்னாள் இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பொதுச்செயலாளரும்)

பதின்நான்காம் நினைவு தினத்தில் அஞ்சலி செலுத்தி ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

— அன்புப் பிள்ளைகள்

''பாலமனை''
வேலணை மேற்கு, வேலணை - 6 (28659)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நடராஜா சந்திரராஜா

(ரோஸ்)
(உரிமையாளர், குகன் ஸ்ரோர், தலவாக்கலை)

தோற்றம்: 20 — 02 — 1948
மறைவு: 19 — 12 — 1989

திதி: 04 - 01 - 1994

ஆருயிர் அப்பாவே! ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி, அந்நிழலில் நாம் வாழநினைக்க பொன்னான மேனியிலே பொல்லாத நோயினால் வந்த காலனவன் அந்த ஆலமரத்தையே வீழ்த்திய பின் நாம் நிழல்தேடி எங்கு செல்வோம். பூவாகி பிஞ்சாகி காயாக வரும் பிள்ளைகளின் பருவம் காணாது நிம்மதியாகத்தான் எங்கு சென்றீர்களோ! இத்தரணியில் நாமிங்கு படும் துன்பம்தீர எங்கள் இருள் சூழ்ந்த வாழ்க்கைக்கு என்றென்றும் எமது இதயங்களில் ஒளிவீசும் தங்கள் எழிலான திருமுகமும் சிறப்பான சிந்தனையும் என்றென்றும் நிலைத்திருந்து வழிகாட்டியாக இருந்து அருள் புரிவீர்களாக!

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் அன்பை ஆதரிக்கும் நெஞ்சங்கள்;
மனைவி:
திருமதி எஸ் சந்திரராஜா
பிள்ளைகள்;
நிரோஷின், நுஜா, நிஷாந்.

பலாலி றோட்
கோண்டாவில் ...
...

---

## நியூட்டன் அக்கடமி

இருபாலை வீதி, கோண்டாவில்.

### கல்வியாண்டு 94

நாளை ஆரம்பம்

பாலர் வகுப்பு
ஆண்டு 01 முதல் ஆண்டு 11 வரை
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

கணிதம் — எஸ். கருணாகரன்
விஞ்ஞானம் — இரா. அருட்செல்வம், இ. ராஜா
தமிழ் — ஞான. திருக்கேதீஸ்வரன்
சமூகக்கல்வி — திரு. கணேஷ்
ஆங்கிலம் — திரு. சந்திரமௌலி
வர்த்தகம் — திரு. வேல்நம்பி

"உயர்ந்த எதிர்காலத்திற்கு உங்கள் அன்புச் செல்வங்களை எம்மிடம் ஒப்படையுங்கள்"

[28754]

## YARL HALL கல்வி நிலையம்

(திருமறைக் கலாமன்றம் முன்பாக)
பிரதான வீதி, யாழ்ப்பாணம்

கிளை

### PERSONAL INSTITUTE

இல, 2, சீனிவாசகம் வீதி, கொட்டடி.

### கல்வியாண்டு 1994 - புதிய வகுப்புகள்

ஆரம்பம்: 05 — 01 — 1994 புதன் மாலை 4-00 மணி

ஆண்டு 5 முதல் O/L வரை சகல பாடங்களும் ஆரம்பமாகின்றன

எமது ஆசிரியர் குழு:

விஞ்ஞானம்: இரா. செல்வவடிவேல், J. கருணைநாயகம், S. கெனத்
தமிழ்: S. கதிர்காமத்தம்பி, S. வாசுகி.
கணிதம்: S. வாமதேவன், M. குமாரவேல், S. அனுசியா,
சமூகக்கல்வி: N. மயில்வாகனம், M. நித்தியானந்தன், S. சிவாஜினி.
வர்த்தகம்: A. அகஸ்ரின், M. சிவகுமார்,
ENGLISH ஆங்கிலம்: T. சௌந்தரபாண்டியன், P. பெனடிக்ற்
ENGLISH-LITERATURE: T. சகாதேவன்.

(6886)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

### கல்வியாண்டு - 1994

O/L EVENING CLASSES (3-15 — 6-00)
SAT - SUN CLASSES (8-00 — 1-00)

ஆண்டு - 10, 9, 8, 7, 6

திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர் குழு:

விஞ்ஞானம் :- திரு. J R. குரி
கணிதம் :- திரு ஜெகன்
சமூகக்கல்வி :- திரு. கோபி
ஆங்கிலம் :- திரு. விஸ்வநாதன்
தமிழ் :- திரு. சிவா, திருப்பதி
வர்த்தகம் :- திரு. கருணாகரன்
சமயம் :- திரு. கஙகா, சங்கர்

ஆரம்பம்: 06-01-1994 (வியாழன்) மாலை 3-15 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

(சி-6867)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

### V. திருவாரட்ணம் மேன் (MANN)

(நீர்ப்பாசன இலாகா, இளைப்பாறிய உத்தியோகத்தர்)

தோற்றம்: 11-09-1927
மறைவு: 05-12-1993

கொடிய அரக்கரவர் தட்டிவிட்ட பொம்மர் குண்டினால் நெடிதான எம் தோன்றலின் வாழ்வு குறுகியதாய் அணைந்து விட்டது
அன்பு அப்பா! எம்மை வளர்ப்பதற்காக - விட்ட பெருமூச்சு நெருப்பான வானத்தில் கண்ணீராய் - பொழிகிறது

அவர் கால்பட்ட நிலமெல்லாம்
அப்பாவின் பெயர் சொல்லி அழுகிறது!

அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இவரின் பிரிவால் ஆறாத் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்.

யாழ்ப்பாணம். (28739)

---

## கவின் கலைகள் பயிலகம்

05 - 01 - 1994 புதன்கிழமை தொடக்கம் எமது பயிலக வகுப்புகள் ஆரம்பமாகின்றன என்பதை பயிலுனர்க்கு அறியத் தருகின்றோம்.

- அதிபர்.

[சி-6915]

## BITSMANS

கல்வி நிறுவனம். மானிப்பாய்.

### கல்வியாண்டு 94
### ஆண்டு 4 முதல் 11 வரை

சகல பாடங்களும் எமது வழமையான "SUPER GRADE" ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படுகின்றது

| | |
|---|---|
| விஞ்ஞானம்<br>J. R. சூரி<br>ராஜகோபால் | கணிதம்<br>இரா. அருட்செல்வம்<br>கனகசுந்தரம்<br>மகேந்திரன் |
| சமூகக்கல்வியும் வரலாறும்<br>என் ராஜன் | தமிழ், இந்துசமயம்<br>பாலா<br>தர்மா |
| ஆங்கிலமும், ஆங்கில இலக்கியமும்<br>தெய்வதவபாலன்<br>ஜெயனொளிபவான் | வர்த்தகமும் கணக்கியலும்<br>என் ராஜன் |

ஆரம்பம்: 05 - 01 - 1994
புதன் மாலை 3-00 மணி
(விண்ணப்பங்களை முன் கூட்டியே பதிவு செய்யவும்)

SPOKEN ENGLISH By M. A. ஹரி B A Dip in. Eng.
திங். வெள். 9-00 மணிக்கு நடைபெறுகின்றது

[சி/6888]

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வ து.)

கலாசாலை வீதி,
திருநெல்வேலி, கோப்பாய்

### வெற்றிடம்

பதவி: **பால் நிலைய - முகாமையாளர் பதவி**

வேதனம்:
855 — 30 X 7 — 40 X 8 — 1385 இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமைகள்:
அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 13ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 14ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது
ஆ. கூட்டுறவு பணியாளர் (உயர்தர) சான்றிதழ்/பாடங்களுடன் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பால் தொடர்பான தொழில் நுட்ப அறிவுடன் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

பதவி: **விற்பனை உதவியாளர்**

வேதனம்:
730 — 20 X 10 — 25 X 5 — 1055 இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமைகள்:
கூட்டுறவுப் பயிற்சி (சாதாரணம்) பத்திரம் க. பொ. த. (சா) பத்திரம் எண்கணிதம்/வர்த்தக கணிதம்/கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி அல்லது தொடர்புடைய துணைப் பதவியொன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

பொது

வயது எல்லை:
வயது 23க்கும் 40க்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும்.
தற்போது கூட்டுறவுச் சங்க பணியாளர்களாக இருப்பவர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

பிணைப் பணம்:
கூ. வே. ஆணைக்குழு சட்டத்திற்கமைய சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

வசிப்பிடத் தகைமை:
குறைந்த பட்சம் 2 வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பத்தோடு — கல்வி, பிறப்பு, நற்சான்றுப் பத்திரங்கள் இணைத்து 18-01-1994ஆம் திகதிக்கு பிந்தாமல் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

தலைவர்,
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி, கோப்பாய்.

[சி-6914]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஜனாதிபதியின் திடீர் மாற்றம்!

வடக்கு-கிழக்கில் நடக்கும் மோதலுக்குத் தீர்வுகாண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தாம் தயாராக உள்ளதாக ஜனாதிபதி விஜேதுங்கா கூறியிருக்கிறார்.

ஆனால் தனி நாடு — தமிழீழ — கோரிக்கையை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் நிபந்தனை விதித்திருக்கிறார்.

அவர் பேச்சு நடத்த இணக்கம் தெரிவித்திருப்பதும், நிபந்தனை விதித்ததும் ஒரு பக்கம். இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை; வடக்கு - கிழக்கில் நிலவுவது பயங்கரவாதமே என்ற தமது குருட்டுத்தனமான கருத்தை இவ்வாறு திடீரென மாற்றியது உண்மையா, நிரந்தரமானதா என்றகேள்வி மறுபக்கம்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் விடுத்த புத்தாண்டுச் செய்தியில், வடக்கு-கிழக்கில் பயங்கரவாதம் நிலவுவதாகவும், அதனைப் பூண்டோடு ஒழித்துக் கட்டப் போவதாகவும் சங்கற்பம் செய்த விஜேதுங்கா —

திடீரென பத்திரிகைச் செவ்வியில், குப்புறப் புரண்டு —

சிறுபான்மையினருக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்க உள்ளதாகவும், மோதலைத் தீர்ப்பதற்கு பேச்சு வார்த்தைக்குத் தயார் என்றும் கூறியிருப்பது ஏன்? எதற்காக?

அரசியல் தீர்வு என்பதை மறந்து இராணுவத் தீர்வையே நாடி நிற்பதாக கடந்த எட்டு மாதங்களாகச் சொல்லிலும் செயலிலும் தீவிரமாகக் காட்டி வந்தவர், உண்மையிலேயே திடீர் என மனம் மாறினாரா? மனம் மாறியவர் போல, அரசியல் சுயநினைவு வந்தவராக நடித்துக் கொள்கிறாரா? — என்பது கண்டறியப்பட வேண்டும்.

சனம் பித்தம், சனம் வாதம் என்ற வயதானவர்களுக்கான வியாதி பீடிக்காமல், பத்திரிகைச் செவ்வியில் தெரிவித்த புதிய நிலைப்பாட்டை அவர் நிரந்தரமாக்குவாரானால் நல்லதே.

விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தயார் என்று கூறியிருப்பது அரசியல் தீர்வை விரும்புகிறார் எப்பதாகும். முழுமையான இராணுவத் தீர்வுதான் என்றால், பேச்சுவார்த்தை தேவைப்படாது அல்லவா?

ஆனால் ஜனாதிபதி பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை விதிப்பது அதில் அவருக்கு உண்மையில் நம்பிக்கை இல்லையோ என்ற சந்தேகத்தையே கிளப்புகிறது. பிணக்குள்ள இருசாராரும் தீர்வு ஒன்றுக்காகப் பேசுவதானால், நிபந்தனை எதுவும் இருக்கக் கூடாது. பிரேமதாசா — ரஞ்சன் விஜேரத்னா காலத்திலும், விடுதலைப் புலிகள் ஆயுதத்தைக் கீழே வைத்துவிட்டு வந்தால்தான் அவர்களுடன் பேசமுடியும் என்று தெரிவித்து, பேச்சு எதனையும் நடத்தாமலே இருவரும் மரணமாகி விட்டனர்!

ஆகையால் ஜனாதிபதி உண்மையிலேயே அரசியல் தீர்வில் நாட்டம் கொண்டால், பத்திரிகைச் செவ்வியுடன் தொங்கிக்கொண்டு நிற்காமல்—

நிபந்தனை எதுவும் இல்லாமல் பேச்சுவார்த்தைக்குத் தாம் தயார்என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும். அந்த அறிவிப்பில் நாட்டின் இனப்பிரச்சினை உண்டு; தமிழர்களின் பறிக்கப்பட்ட உரிமைகளை வழங்கவேண்டிய தேவை உண்டு என்பதனையும் குறிப்பிட வேண்டும். அப்போது தான் ஜனாதிபதி மனம் திரும்பியுள்ளார்— திருந்தி உள்ளார் — என்று நம்பலாம்.

உண்மையாகவே அவர் மனம் திருந்தினாலும், பேச்சுவார்த்தை நடப்பதற்கான சூழ்நிலையை முதலில் உருவாக்க வேண்டும். விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு போகும் விதத்தில் அவர்களை நடத்த வேண்டும். அவர்கள் தமிழர்களின் விடுதலைப் போராட்டப் படை என்பதனை ஏற்றுக் கொண்டு செயற்பட வேண்டும். அவர்களுக்குப் பயங்கரவாதிகள் என்று பெயர் சூட்டியும், பூண்டோடு அழிக்கப் போவதாகக் கங்கணம் கட்டியும் 'கலரி'க்கு விளையாடிக் கொண்டு, பேச்சுவார்த்தைக்குத் தாயார் என்பது அர்த்தமற்றது. வெறும் வெற்று வேட்டாகும்!

# புலிகளை அழிப்பது என்பது இயலாத காரியம்!

# அரசியல் தலைமைத்துவம் சிந்தித்து செயற்படுமா?

''சண்டே ஐலண்ட்'' 26 — 12 — 1993 வார இதழில் ராவணா எழுதிய கட்டுரையின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சட்டம், ஒழுங்கு பராமரிப்பு பல தசாப்தங்களாகச் செயலிழந்துள்ளன.

நிர்வாக ரீதியிலும், இராணுவ ரீதியிலும் அரச இயந்திரத்தை இயங்கச் செய்ய முடியாத நிலையில் விடுதலைப் புலிகள் செயலாற்றி வருகின்றனர்.

கைக்குள் அடக்கக்கூடிய போராளிகளைக் கொண்டதாக இருந்த ஓர் அமைப்பு தற்போது சர்வதேச ரீதியில் தொடர்புகளைக் கொண்டதான ஒன்றாக உறுதியான வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

இந்த நிலையில் அரசாங்கத்தின் உத்தி மீள்பரிசீலனை செய்யப்பட்டு மீள் அமைக்கப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதை நோக்கிய ஓர் உத்தியைக் கண்டுபிடிப்பது, வடக்கு - கிழக்கின் அண்மைக்கால வரலாறைப் புரிந்து கொண்டால் மட்டுமே சாத்தியமாகும்.

மூன்று காலவரையறைகள் குறித்து நுணுக்கமான பரிசீலனை தேவைப்படுகிறது.

### 3 கட்டங்கள்

முதலாவது கட்டம்: 1972 முதல் 1982 வரையான காலப் பகுதி.

இக்காலப் பகுதியில் தமிழர் அரசியல் தமிழ்ப் போராளித்துவத்துக்கு மாறியது. ஓரங்கட்டப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகள் இன்னும் பழைய நிலைக்கு வரவில்லை.

இரண்டாவது கட்டம்: 1982 முதல் 1987 வரையான காலப்பகுதி.

இக்காலப் பகுதியில் இந்திய இராணுவ, அரசியல் மறைமுக உதவியுடன் தமிழ்ப் போராளித்துவம் உச்ச நிலையை அடைந்தது.

மூன்றாவது கட்டம்: 1987 முதல் இன்று வரையான காலப்பகுதி. பிரதான அரசியல் நீரோட்டத்தில் விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய போராளிக் குழுக்கள் சேர்ந்து கொண்டன.

விஜேதுங்கா தலைமையிலான அரசு நாட்டில் இருப்பது இனப்பிரச்சினை அல்ல; பயங்கரவாதம்தான் என்று நம்புகிறது. இராணுவ அணுகுமுறையிலேயே விஜேதுங்கா நாட்டம் கொண்டுள்ளார்.

### 4 ஆவது கட்டம் எப்படி இருக்கும்?

இந்தச் சந்தர்ப்பத்தில் நான்காவது கட்டம் எப்படி இருக்கப்போகிறது?

பல மாற்றங்கள் இடம் பெறுவதால் அடுத்தகட்டம் எப்படி இருக்கும் என்பது பற்றி ஆரூடம் கூறுவது கஷ்டமானது.

எப்படியாயினும் — பின் வரும் மூன்றில் ஒன்றாக அது இருக்கலாம்.

முதலாவது, தமிழீழம் உருவாகுவது.

இரண்டாவது, விடுதலைப் புலிகள் இயக்கத்தை முற்றாக அழிப்பது.

மூன்றாவது, விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது.

### தமிழீழத்துக்கு இந்தியா உடன்படாது

இத்தெரிவுகளில் பல காரணங்களுக்காக தமிழீழம் உருவாகுவது நடக்கமுடியாத அரிதான ஒன்றாகும்.

இதற்கு பெருத்த முட்டுக்கட்டையாக இந்தியா இருக்கும்.

அகன்ற தமிழர் நாடு ஒன்றை உருவாக்குவதற்குஇது முதற்படிக்கல்லாக இருக்கும் என்பதால் இந்திய அரசு இனவாத தமிழ்த்தனிநாடு அமைய ஒரு போதும் அனுமதிக்காது.

தமிழர்களுக்கு என தனி நாடு ஒன்றை உருவாக்குவது இந்தியாவில் உள்ள 22 தீவிரவாத தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் போராளி அமைப்புகளின் கனவாக இன்று இருந்து வருகிறது. இந்த 22 கட்சிகளுக்கும் 30 லட்சம் மக்களின் ஆதரவு உண்டு.

வரலாற்று ரீதியாக, இந்தியாவில் முதன் முதலாக தனிநாடு கோரி போராட்டம் நடத்தியது பஞ்சாப்போ அல்லது காஷ்மீரோ அல்ல; தமிழ் நாடுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கைப் பிரசாரம் தீவிரமடைந்தபோது, இந்தியாவின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் விசுவாசம் தெரிவிக்கும் பிரமாணத்தை பதவி வகிப்பவர்கள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தும் 16 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை அப்போதைய பிரதமர் ஜவஹர்லால்நேரு கொண்டு வந்தார்.

தமிழர்கள் தென் இந்தியாவில் இருந்து வந்து ஆக்கிரமிப்பாளர்கள் என்று இலங்கையில் 70 சதவீத சிங்கள வர்களும் சிந்தனை செய்ய வைக்கப்பட்டுள்ளனர்.

கிறிஸ்துவுக்கு முதன் முதலாவது நூற்றாண்டில் இருந்து பெரும்பாலும் தென் இந்தியத் தமிழர்கள் 17 தடவைகள் இலங்கையை ஆக்கிரமித்துள்ளனர் என்பதற்கு வரலாற்றுப் பதிவுகள் உண்டு.

வரலாற்றின் இந்தப்பெரிய சுமை தான் இந்திய அமைதிப்படையினருக்கு எதிராக சிங்கள வரை கொதித்து எழ வைத்ததும், தனித்தமிழ்நாடு கோரி தமிழ் அரசியல்வாதிகள் பிரசாரம் செய்யவைத்ததும் ஆகும்.

ஆகவே இந்த நாட்டைப் பிரிப்பதற்கு எந்த அரசாங்கத்தையும் சிங்களவர்களின் பயப்பிராந்து ஒரு போதும் அனுமதிக்காது. இந்த வழியில் அரசு சென்றால் அது பதவியில் நீடிக்காது.

## இன்றைய நிலை நீடித்தால் நாட்டில் பேரழிவு ஏற்படும்

1974இல் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் தலைமைத்துவத்தை பிடிக்கும் முயற்சி 1978இல் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

மடுவில் விடுதலைப் புலிகள் முகாமுக்கு அருகே இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையும் அவரது குழுவினரும் கொல்லப்பட்டனர்.

### அழிக்க முடியாத விடுதலைப் புலிகள்

1979 இல் பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்கா ஜெயவர்த்தனாவினால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். விடுதலைப் புலிகளை அழிக்க முடியவில்லை.

1983 முதல் பிரிட்டன் இஸ்ரேல், அமெரிக்கா, பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் உதவியுடன் இலங்கை அரச படையினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் நடத்தினர். ஓராண்டுக்குள் யுத்தத்தை வெற்றியாக முடித்து தருவதாக இராணுவத் தளபதி அப்போது ஜனாதிபதிக்கு உறுதியளித்தார். ஆனால் உறுதிமொழி காப்பாற்றப்படவில்லை.

1987 இல் இந்தியப் படை வந்தது. விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விடுவர் என்று பலரும் நம்பினர். இந்தியப் படையுடன் விடுதலைப் புலிகள் நேருக்கு நேர் மோதினர். அப்போதும் விடுதலைப் புலிகளை அழிக்க முடியவில்லை.

இந்தியப் படை திரும்பியதும் மீண்டும் 2ஆவது ஈழம் யுத்தம் - விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையே ஆரம்பமானது.

இந்த யுத்தத்தில் இராணுவ முகாம்கள் அழிக்கப்பட்டன. படையினரிடம் இருந்து பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. கொழும்பில் நடப்பது குறித்து கூர்ந்து கவனிப்பின், இப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து சாதகமான முறையில் கொழும்பு அரசோ அல்லது தமிழ்க்குழுக்களோ சிந்திப்பதாகத் தெரியவில்லை.

### தமிழ்க் குழுக்கள் விஸா வியாபாரம்

கொழும்பில் உள்ள தமிழ் போராளிக் குழுக்கள் என்ன செய்கின்றன?

இரண்டு குழுக்கள் விஸா வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளன.

மற்றும் இரண்டு குழுக்கள் அரசிடமிருந்து மாதப் பணம் பெறுகின்றன அவை தாண்டிக்குளம் தடைமுகாமில் வைத்து ஒவ்வொரு லொறிக்கும் 10 ஆயிரம் ரூபா பணம் வாங்குகின்றன. இப்பணத்துக்கு என்ன நடக்கிறது? அரசுக்கு ஒன்றுமே தெரியாது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் தமது செல்வாக்கை சீர்செய்ய அரசு முயற்சிக்கிறதா?

அல்லது தமிழ்க் குழுக்கள் துப்பாக்கிமுனையில் பணம் சேகரிக்க அனுமதிப்பதன் மூலம் தமது செல்வாக்கை அழிக்க அரசு முயற்சிக்கிறதா?

இந்த நடவடிக்கைகள் குறித்து சிறு பத்திரிகைகளும் தேசியப் பத்திரிகைகளும் மௌனஞ் சாதிப்பது ஏன்?

எம்.பிக்கள் ஏன் மௌனமாக இருக்கிறார்கள்!

தமிழர் விடுதலைக் கூட்டணி என்ன செய்கிறது?

அவர்களை இந்தியா அழைப்பது குறைந்து விட்டது.

1994 இலங்கைக்கு நெருக்கடி ஆண்டாக இருக்கப் போகிறது விடுதலைப் புலிகளின் எழுச்சியையோ, வீழ்ச்சியையோ இந்த ஆண்டு காணப்போகிறது.

புதிது புதிதாக நடவடிக்கைகளை எடுக்கும் முயற்சியும் திறமையும் கொண்ட ஓர் அமைப்பான விடுதலைப் புலிகள் இயக்கம் பேரழிவுகளை ஏற்படுத்தும்.

ஆகவே அரசியல் தலைமைத்துவம் அறிவுபூர்வமான உத்தி ஒன்றைக் கண்டுபிடித்து நாட்டில் இயல்புநிலையையும் சகஜநிலையையும் ஏற்படுத்த வேண்டும்.

இப்படி கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

# குடாநாட்டுக்கான தபால்களை படையினர் உடைத்து சோதனை!

கொழும்பு, ஜன. 4

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் அனுப்பப்படும் தபால்கள் கடற்படையினரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

தபால் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட பத்திரிகைப் பார்சல்கள் மற்றும் நீண்ட தபால் உறைகளுக்குள் 'பென்டோர்ச் பற்றறி', பணநோட்டுக்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் —

இதனை அடுத்தே தபால்களை உடைத்துச் சோதிக்கும் நடவடிக்கையை கடற்படையினர் மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த மூன்று மாதங்களாக யாழ்ப்பாணத்துக்கான தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படாததால் கொழும்பில் 1,500க்கும் மேற்பட்ட தபால் பொதிகள் தற்போது தேங்கிக் கிடக்கின்றன.

இவற்றுள் கடந்த மாதம் இறுதிவரை 200க்கும் மேற்பட்ட தபால் பொதிகள் மட்டுமே கடற்படையினரால் உடைத்து சோதனையிடும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதாகவும் எஞ்சியவையும் உடைத்து சோதனையிடப்பட்ட பின்பே அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகத்துக்கு உரியவையாகக் கருதப்பட்டு உடைத்து சோதனையிடப்பட்ட தபால் பொதிகள் வாதுவ கப்பல் மூலம் எடுத்து வரப்பட உள்ளன.

யாழ்ப்பாணத்துக்கான தபால்களை உடைக்கும் நடவடிக்கைகள் முன்பும் மேற்கொள்ளப்பட்டதும் —

இந்த விவகாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதை அடுத்து தபால்களை உடைக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டதும் தெரிந்தவையே.

தற்போது சோதனையிடும் நடவடிக்கைகள்மீண்டும்ஆரம்பிக்கப்பட்டு தபால்கள் வந்து சேருவதில் தாமதம்ஏற்பட்டுள்ளதால் வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர்களிடமிருந்து அவசர தகவல்களை எதிர்பார்த்திருந்தோர் ஏமாற்றம் அடைந்துள்ளனர். (இ)

## பூநகரி தாக்குதல் எதிரொலி பங்குச் சந்தையில் வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 4

பூநகரித் தாக்குதலைத் தொடர்ந்து கொழும்புப் பங்குச் சந்தையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும்—

இதன் காரணமாக பல வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் பங்குகளை குறைந்த விலைக்கு விற்று விட்டு சென்றுள்ளதாகவும் சண்டே ரைம்ஸ் தகவல் வெளியிட்டது. (ஒ-எ)

## விவசாய ஓய்வூதியம்; அதிகம் பேர் சேருவர்

வலிகாமம்தெற்கு, ஜன 4

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்ளும் விவசாயிகளுக்கான வயது எல்லை 50ஆகக் குறைக்கப்பட்டதால் அதிகமான விவசாயிகள் இதில் சேரவுள்ளனர்.

இம்மாதம் முதல் திகதியில் இருந்து ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்வோர் 50 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும் என கொழும்பு கமத்தொழில் காப்புறுதிச் சபை தலைமையகத்தால் அனுப்பப்பட்டுள்ள 272ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டோர் இதுவரை காலமும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு வந்தனர்.

(இ-152)

## அரச தரப்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டிருப்பது அரசுக்கு தலையிடியைக் கொடுக்கக் கூடும்.

என்றாலும் மாணவர்கள் கடத்தப்பட்டதும், கொலை செய்யப்பட்டதும், ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சிக் காலம் என்பதால் —

தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க உள்நாட்டு, வெளிநாட்டு மனித உரிமைகள் குழுக்களின் நெருக்குதல்களுக்கு அஞ்சி மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட இணங்கக் கூடும் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

## வெங்காய செய்கை பாதிப்பு

தாளையடி, ஜன 4

வெள்ளப் பெருக்கினால் வடமராட்சி கிழக்கில் வெங்காயச் செய்கை பாதிப்படைந்துள்ளது.

தொடர்ந்து பெய்த மழையினால் வெங்காயத் தோட்டங்கள் நீரில் மூழ்கியதுடன் வெள்ளத்தால் அடித்தும் செல்லப்பட்டுள்ளன. (த-144)

## லயன்ஸ் அன்பளிப்பு

சண்டிலிப்பாய், ஜன. 4

பெரியவிளான் பகுதியில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து மிகவும் வறுமை நிலையிலுள்ள ஒன்பது பேரைக்கொண்ட ஏழைக் குடும்பம் ஒன்றுக்கு மானிப்பாய் லயன்ஸ் கழகம், கழகத்தின் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் சிங்கர் தையல் இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது

(க-135)

## சங்கானை ஆஸ்பத்திரியில் மருந்துக்குத் தட்டுப்பாடு

சண்டிலிப்பாய், டிச. 4

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் முக்கிய மருந்து வகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இவ் வைத்திய சாலையில் நோயாளர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளதாகவும், வார்ட்டுகளிலும் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதும் மருந்து வகைகள் கையிருப்பில் இல்லை என்றும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

(த-135)

விதையை முறையாகத் தெரிந்தால் விளைவைச் சரியாகப் பெறலாம்

## வறுமையிலிருந்து மீளவே ராணுவத்தில் சேர்ந்தார்

### ஆனால் பிரேதப்பெட்டியே வீடுவந்தது

வறுமையில் இருந்து தம்மையும், தமது குடும்பத்தையும் பாதுகாக்கும் நோக்குடனேயே எனது பெறாமகன் இராணுவத்தில் சேர்ந்தார்.

ஆனால் நாங்கள் சற்றும் எதிர்பாராத வகையில் பெயர் மட்டும் பொறிக்கப்பட்ட வெறும் பிரேதப் பெட்டியே எமக்கு வந்து சேர்ந்தது.

பூநகரியில் உயிரிழந்த ஒரு சிப்பாயின் உறவினர் பி. பி. ஸி. சிங்கள சேவை 'சந்தேஸய'வுக்கு இவ்வாறு எழுதியுள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பூநகரி முகாம் வீழ்ச்சியைத் தொடர்ந்து உயிரிழந்த, காணாமற்போன சிப்பாய்கள் குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை. அரச தொடர்புச் சாதனங்கள் மௌனம் சாதித்தன.

தென்னிலங்கை மக்கள் விவரம் ஏதும் தெரியாது திணறிக் கொண்டிருந்தனர். எனது தமையனின் மகனின் நிலை குறித்து ஏதும் தெரியாது நாங்கள் துயருற்று இருந்தோம் — என்று உள்ளது. (ஒ 6)

## அரபாத்தின் அணுகுமுறையில் மாற்றம் அவசியமென வலியுறுத்து

### பலஸ்தீன தூதுக்குழு டுனிஸ் பயணம்

இஸ்ரேலுடன் தற்போது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத் கடைப்பிடிக்கும் அணுகுமுறைகளில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை பலஸ்தீனர்கள் மத்தியில் வலுத்து வருகிறது

பலஸ்தீனர்களுக்கு வரையறுக்கப்பட்ட சுயாட்சி வழங்குவதற்கு இஸ்ரேலினால் ஒப்புக்கொள்ளப்பட்ட காஸா மற்றும் ஜெரிக்கோ பகுதிகளைச் சேர்ந்த பலஸ்தீனத் தூதுக்குழு ஒன்று யாஸிர் அரபாத்தைச் சந்திப்பதற்காக டுனிஸ் வந்துள்ளது.

யாஸிர் அரபாத், இஸ்ரேல் தொடர்பாகக் கடைப்பிடிக்கும் கொள்கைகளுக்கு இத்தூதுக்குழுவினர் எதிர்ப்புத் தெரிவிக்க உள்ளனர்.

இதற்கிடையில் நேற்று திங்கட்கிழமை எகிப்தின் ராபா நகரில் நடைபெற இருந்த இஸ்ரேல் — பலஸ்தீன பேச்சுக்களில் கலந்துகொள்ள இஸ்ரேல் மறுத்துவிட்டது.

பலஸ்தீன விடுதலை இயக்கம் அளவுக்கு அதிகமான சலுகைகளை எதிர்பார்ப்பதாக இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதேசமயம், பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதான இராணுவப் பிரிவான 'பதாஹ்' நிறுவப்பட்ட 29 ஆவது வருடாந்த தினம் காஸாவிலும், ஜெரிக்கோவிலும் கொண்டாடப்பட்ட போது, இஸ்ரேல் படையினருக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

ஒப்பந்தத்தின்படி டிசம்பர் மாதம் 13ஆம் திகதி காஸாவிலும் ஜெரிக்கோவிலும் இருந்து இஸ்ரேல் படைவாபஸை ஆரம்பித்திருக்க வேண்டும்.

இஸ்ரேல் இதில் தவறியதில் இருந்தே இஸ்ரேலுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையில் முரண்பாடுகள் ஆரம்பமாகின. (இ)

## மூன்றாவது நாளாக நேற்றும் ஆப்கானில் மோதல்கள்

ஆப்கானிஸ்தானில், சிறுபான்மையினருக்கு உரிய உரிமைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய தான அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்காகவே தாம் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்பதாக கிளர்ச்சிக்குழு ஒன்றின் தலைவர் ஜெனரல் துஸ்தம் தெரிவித்தார்.

ஆப்கன் தலைநகர் காபூலில் ஜனாதிபதி ரபானி தலைமையிலான அரசுப்படையினருக்கு எதிராக ரொக்கெட் மற்றும் ஷெல் தாக்குதல்களை கிளர்ச்சிக் குழுக்கள் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தும் நடத்தின

ஜனாதிபதி ரபானி தமது சொந்த தாஜிக் இனத்தவரின் நன்மைகளுக்கு முதலிடம் வழங்கும் அரசாங்கத்தையே நடத்தி வருவதாகவும் ஜெனரல் துஸ்தம் குற்றஞ்சாட்டினார்.

(ஒ எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டில்... புத்தம் புது நிகழ்ச்சி

யாழ், ரமணனின்

ராஜன்ஸ் இசையில்

சாந்தன்

முதன் முறையாக இணைந்து பாட்டிசைக்க

ராஜன்ஸ் படைக்கும்

**இன்னிசைப் பொங்கல்**

S. G. சாந்தனுடன், ஜெயா சுகுமார், பார்வதி சிவபாதம், வர்ணராமேஸ்வரன், S. திவாகர், S. சத்தியசீலன், ஸ்ரனி சிவானந்தன், திருமலை சந்திரன், ஈழத்து மனோ நாவலன் ஆகியோரின் —

❋ இசைச்சுவை ❋

"சிற்றி போய்ஸ் டெய்லர்ஸ் ஆதரவில்" தங்கவேல் செல்வராஜா குழுவினரின்

"ரிபுங்கள் சிந்தியுங்கள்"

நகைச்சுவை ✱

மாஸ்டர் கஜேந்திரனின் ஓர்கன் இசை

இடம்: வேர்பட மகளிர் கல்லூரி

காலம்: 14 – 01 – 1994

நேரம்: பி. ப. 2-30. மாலை 7மணி

டிக்கெற்: 100/- 50/-

நிகழ்ச்சி சிறக்க
மேகாஸ் வீடியோ
வாழ்த்துகின்றது.

குடும்பத்தின் குதூகல நிகழ்வுகள் — காலத்தால் அழியா சரித்திர நிகழ்வுகள் — இல்லங்களில் இடம் பெறும் இனிய விழாக்கள் — அனைத்தையும் உள்ளத்தில் பதியும் வண்ணம் அதி நவீன வீடியோ கமராக்களால் வீடியோ மிக்ஸர் மூலம் படமாக்க

மேகாஸ் வீடியோ

கண்டி வீதி (மாம்பழம் சந்தி), அரியாலை.

(28758)


# பேச்சுவார்த்தை நடத்துவதற்கு திரைமறைவு ஏற்பாடுகளாம்!

கொழும்பு, ஜன 4

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான திரைமறைவு முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறாராம்!

''லங்காதீப'' சிங்களப் பத்திரிகை இப்படி ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது.

தமிழ் நாட்டின் முன்னாள் பிரதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சே.மோகன்தாஸின் உதவியை ஜனாதிபதி இது விடயத்தில் நாடியதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

திரு.மோகன்தாஸ் கடந்த மாத மத்தியில் கொழும்பு வந்திருந்தார். அவ்வேளை அவர் ஜனாதிபதி விஜேதுங்கா அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா ஆகியோரைச் சந்தித்து நீண்ட நேரம் பேச்சு நடத்தியிருந்தார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்துவதற்காகவே மோகன்தாஸ் கொழும்பு வந்தார் என்று ''லங்காதீப'' தெரிவித்துள்ளது.

அது பற்றிய விவரங்கள் குறித்தே அவர் ஜனாதிபதியுடன் பேசினார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுக்களை நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மோகன்தாஸின் உதவியுடன் செய்துவிட்டால், அடுத்த கட்ட உதவிகளைச் செய்வதற்கும், நடுவில் நின்று காரிய மாற்றுபவர்களாகப் பணிபுரிவதற்கும் கொழும்பில் உள்ள பல வெளிநாட்டுத் தூதரகங்கள் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் அதே செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மோகன்தாஸ் விடுதலைப் புலிகளுக்கு மிக நெருக்கமானவர் என்று குறிப்பிட்டே ''லங்காதீப'' செய்தி எழுதப்பட்டுள்ளது. (அ-9)

## டி.பி. - ஜெரி சந்திப்பு

கொழும்பு, ஜன-4

புதிதாக பதவியேற்றுள்ள இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரிடிசில்வா நேற்று ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவைச் சந்தித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் பற்றி பேசப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (உ-9)

## கல்முனைக் கடலில் கடற்படைக் கப்பல்

குருநகர், ஜன. 4

பூநகரி — கல்முனைக் கடலில் நேற்று அதிகாலை முதல் பாரிய கடற்படைக் கப்பலும் மற்றும் இரு சிறு கப்பல்களும் நங்கூரமிட்டு நிற்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இவற்றிலிருந்து பூநகரி காஞ்சகாடு படையினர் முகாமுக்கு இராணுவத் தளபாடங்கள் இறக்கப்படக்கூடும் எனச் சந்தேகிக்கப்பட்டது. (உ-51-17)

## நாளை முதல் வேட்புமனு

கொழும்பு, ஜன-4

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கும் வவுனியா நகர சபைக்குமான தேர்தல் நியமனப் பத்திரங்கள் நாளை முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன.

இந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் ஏற்கனவே இருதடைவைகள் திகதி அறிவிக்கப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டன என்பது தெரிந்ததே. (உ-9)

32 மாணவரின்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மலைப்பகுதி 4 ஆயிரம் அடி உயரத்தில் உள்ளது. இங்கு ரூபவாஹினி— ரெலிகொம் அமைப்புகளின் ஒலிபரப்பு நிலையம் அமைந்துள்ளது.

1988 முதல் 1990 மே மாதம் வரை ஜே. வி. பி. கிளர்ச்சி உச்சக்கட்டத்தில் இருந்த போது ஒலிபரப்பு நிலையப் பாதுகாப்புக்காக இங்கு ஓர் இராணுவ முகாமும் அதன் காவலரண்களும் இருந்தன. அப்பகுதியில் பொலீஸ் நிலையம் ஒன்றும் உள்ளது.

இப்பகுதியில் நடமாட மக்களுக்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த சூனியப் பகுதியிலேயே எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

## மலேரியாவுக்கு மூவர் பலி

யாழ்ப்பாணம், ஜன. 04

மலேரியா, மற்றும் வயிற்றோட்டம் போன்ற நோய்களால் கிளிநொச்சியில் மூவர் உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வயல் வெள்ளத்தில் வீழ்ந்து மரணம்

தாளையடி, ஜன, 03

வயல் வெள்ளத்திற்குள் தவறி வீழ்ந்து வயோதிபர் ஒருவர் மரணமானார்.

இச்சம்பவம் நாகர்கோவிலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. குடாரப்பைச் சேர்ந்த நாகலிங்கம் (வயது 84) என்ற வயோதிபரே மரணமானவராவார். (2-144)

கடற்படைக்கு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

12.7 மி. மீ. துப்பாக்கிகள் ஆகியவை பொருத்தப்பட்டனவாகவும் இருக்கவேண்டும்; இவ்வாண்டு இறுதிக்கு முன் அவற்றை கடற்படைக்கு வழங்கவேண்டும்.

இதேபோன்ற படகுகள் சம்பந்தமான கடைசி ஒப்பந்தம் கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்டது. முதலாவது படகு — பிரான்ஸில் கட்டப்பட்டு — நான்குவாரங்களுக்கு முன் கடற்படைக்கு வழங்கப்பட்டது. மிகுதி மூன்று படகுகள் அடுத்த சில மாதங்களில் கொழும்பில் கட்டப்படும்.

புதிதாகக் கேள்விப் பத்திரங்களில் கோரப்பட்ட மாதிரியான படகுகளே இவையாகும்.

ஆழம் குறைந்த நீரில் செலுத்தக் கூடிய படகுகளையே கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் தயாரிக்க முன்வந்து உள்ளது. ''வார்ட்டர் நெட்'' என்ஜின்கள் அப்படகுகளில் பொருத்தப்பட்டிருக்கும்.

ஆழங்குறைந்த நீரில் ஏறி இறங்கும் ''புறொப்பெல்லர்களை பொருத்தும் புதிய தொழிநுட்பம் இஸ்ரேலிய படகுகளில் பயன்படுத்தப்படவுள்ளது.

1984-1988 காலப் பகுதியில் 12 ''டோறா'' அதிவேக படகுகளை இஸ்ரேல் இலங்கைக்கு வழங்கியது. 1988 இல் தென்கொரியா மூன்று அதிவேகபடகுகளை கடற்படைக்கு விநியோகித்தது. (உ-எ)

அரசியல்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய பிரதான அம்சங்கள் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளிப்பதாக இக்குழுவின் யோசனைகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதற்கு எப்படியான முன் முயற்சி எடுக்கப்படவேண்டும், பேச்சு எப்படி நடத்தப்படவேண்டும், தீர்வு சம்பந்தமான உடன்பாடு எவ்வாறு அமுல் செய்யப்படவேண்டும் என்பன குறித்தும் இக்குழு தனது அறிக்கையில் விவரித்துள்ளதாம். (உ-எ)


கொக்குவில்

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் வித்தியாலயம்

மேற்படி பாடசாலையின் மாணவர்கள் பாடசாலை நிலைய இடமாற்றம் சம்பந்தமான அறிவித்தலைப் பெறுவதற்கு நாளை (5,1.1994) புதன்கிழமையன்று பாடசாலைக்கு சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

அதிபர்

(28759)



கர்நாடக காங்கிரஸ் அரசில் நெருக்கடி.


## கர்நாடக காங்கிரஸ் அரசில் நெருக்கடி.

கர்நாடக மாநில உதவி முதலமைச்சரும், காங்கிரஸ் கட்சிக்குள் உள்ள அதிருப்தியாளர் குழுவின் தலைவருமான எஸ்.எம்.கிருஷ்ணாவும் முதல்வர் வீரப்பமொய்லி அரசின் 7 அமைச்சர்களும் நேற்று தமது பதவிகளை இராஜினாமாச் செய்தனர். (உ-த)


எடிசன் அக்கடமி

✱✱✱✱✱✱✱✱✱

(யாழ். இந்துக் கல்லூரி அருகில்)

411/1, கே. கே. எஸ், வீதி, யாழ்ப்பாணம்

கல்வி ஆண்டு 1994

ஆண்டு 4 முதல் O/L வரை யாழ். பிரபல ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவை

| | |
|---|---|
| கணிதம் : | திரு. B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் : | திரு. இரா. செல்வவடிவேல்<br>திரு. J. J. கொலின்ஸ் |
| சமூகக்கல்வி : | திரு. K. S. முத்துலிங்கம் |
| தமிழ் : | திரு தங்கவேல்<br>திரு. S. கர்திகாமத்தம்பி |
| ஆங்கிலம் : | திரு. மனோரஞ்சன் |
| வர்த்தகம் : | திரு. விக்கி |
| சமயம் : | திரு. கோ. இராஜலிங்கம் |

ஆரம்பம் 06 - 01 - 1994

வியாழன் பி. ப. 4 மணி

முக்கிய குறிப்பு

✱ O/L ற்கு கணித, விஞ்ஞான பாடத்திட்டம் 8 ஆம் மாதம் பூர்த்தியாக்கப்படும்.

★ கடந்த 18 வருட வினாக்கள் மீட்கப்படும்.

[சி 6919]



புதிய

எடிசன் அக்கடமி

✱✱✱✱✱✱✱✱✱

(கொக்குவில் இந்து அருகில்)

27, கே. கே எஸ். வீதி, கொக்குவில்.

கல்வி ஆண்டு 1994

ஆண்டு 4 முதல் O/L வரை யாழ். முன்னணி ஆசிரியர் குழுவின் இணைந்த சேவை.

| | |
|---|---|
| கணிதம்: | திரு. B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம்: | திரு. J. R. சூரி<br>திரு. J. J. கொலின்ஸ் |
| சமூகக்கல்வி: | திரு. க. கோபி |
| தமிழ் : | திரு. தங்கவேல்<br>திரு. S. கதிர்காமத்தம்பி |
| ஆங்கிலம் : | திரு. C. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் : | திரு. தர்மராஜன் |
| சமயம் : | திரு. கோ. இராசலிங்கம் |

ஆரம்பம்: 06-01-1994

ாழ பி. ப 4 மணி

முக்கிய குறிப்பு

✱ O/Lற்கு பாடத்திட்டம் 8 ஆம் மாதம் பூர்த்தியாக்கப்படும்

✱ கடந்த 8 வருட வினாக்கள் மீட்கப்படும்.

(சி/6920)



தென்மராட்சியில்...

ஆண்டு 5 முதல் O/L வரையிலான வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த கல்வி நிறுவனம்

கலைமகள் கல்வி நிலையம்

சரசாலை, சாவகச்சேரி.

சகல வகுப்புகளும் ஆரம்பம்

06 - 01 - 1994 வியாழன்

பிற்பகல் 4மணி

- அதிபர்.

(28753)


## மரண அறிவித்தல்கள்

### சங்கரப்பிள்ளை செல்வராஜா

காரைநகர் பாலாவோடையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை செல்வராஜா 2/1/94 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலம் சென்ற முகாந்திரம் ஆ. ச. சங்கரப்பிள்ளை வள்ளியம்மையின் அன்பு மகனும், புஸ்பா லோசனியின் அன்புக் கணவரும், பிரவின் சங்கரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற முத்துலிங்கம் தனபாக்கியத்தின் மருமகனும், காலம் சென்ற திரு. திருமதி ஆ. ச. சுந்தையாவினதும் திரு. திருமதி ஆ. ச. ஆறுமுகம் அவர்களினதும், பெறா மகனும் அன்னம்மா (இந்தியா), இராசரத்தினம், ஞானப்பிரகாசம் (லண்டன்), பத்மாவதி (அபுதாபி), இராஜேஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரினதும் சகோதரனும் டாக்டர் வைத்தியலிங்கம் (இந்தியா), பாலசண்முகம் (அபுதாபி), மனோன்மணி, வசந்தாதேவி (லண்டன்), தனபாலசிங்கம், சுகந்தமலர் ஆகியவர்களின் அன்பு மைத்துனருமாவார். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

த. ராஜேஸ்வரி (சகோதரி)

இல 4, செட்டித்தெரு நல்லூர்.

(28762)

### யோகேஸ்வரி சண்முகலிங்கம்

கரம்பன் தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட யோகேஸ்வரி சண்முகலிங்கம் 3 - 1 - 94 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இராசையா சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலம்சென்ற மு. இராமலிங்கம், திருமதி ஜானகி இராமலிங்கம் ஆகியோரின் அன்பு மகளும், விக்கினேஸ்வரன், தமிழ்செல்வி (பிரான்ஸ்), சுதாகரன் (சுவிஸ்சர்லாந்து), கலைச்செல்வி, வாகினி, சசிமீரா ஆகியோரின் அன்புத் தாயாரும், சபாநாதன் (நீர்கொழும்பு), சண்முகநாதன் (கனடா), யோகநாதன் (ஜேர்மனி), கணேசநாதன் (சுவிஸ்), கமலேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சதாசிவம் விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), சிவகுமார் (மானிப்பாய்)ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஆஸ்பத்திரி வீதி மானிப்பாயில் இருக்கும் அன்னாரது இல்லத்தில் இருந்து பிற்பகல் 3 மணிக்கு பிப்பிலி மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காகஎடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்:

சண்முகலிங்கம் (கணவர்)

ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்.

(28769)

### திருமதி அந்தோனியாள் கந்தையா

சரவணை மேற்கு 2 ஆம் வட்டாரத்தை சேர்ந்தவரும், அரியாலையில் சாம்சன் வீடமைப்புத் திட்டத்தில் வசித்தவருமான காலஞ்சென்ற மாதன் கந்தையாவின் அன்பு மனைவி அந்தோனியாள் காலமானார்.

இவர் நாகம்மா சுப்பிரமணியம், கனகலிங்கம் (சவூதி), மகாலிங்கம், கமலா தேவி, சுந்தரலிங்கம் (சுவிஸ்), சண்முகம்பிள்ளை (ஆசிரியர், சண்முகநாதன் மகா வித்தியாலயம், பண்டிதர்குடியிருப்பு), காலஞ்சென்ற தேவி, லட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னையா, பூவதி, ஏகாம்பிகை, சண்முகலிங்கம், அந்தோனியாப்பிள்ளை, சந்திரா, பரமேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற சிதம்பரன், முருகன், கந்தன், இராமன், பர்வதம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நாகாத்தை, புவனம், மரியம்மா, கந்தையா ஆகியோரின் மைத்துனியும், இராசேஸ்வரி, மகேஸ்வரி, லோகேஸ்வரி, தியாகேஸ்வரி, சிவனேஸ்வரி, ஈசன், ரவி, சுரேஸ், செந்தூர், நவநீதன், ஆரணன், மதி, மயூர், மதிவாணன், மயூரி, லக்ஷா, ஜெயக்குமார், சசிக்குமார், விஜயகுமார், சத்தியராஜ், வினோதினி, லோகேஸ்வரன், அனுசியா, விசாகரன், பிரசன்னா, கயலக்ஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இன்று செவ்வாய்க்கிழமை (4-1-94) பிற்பகல் 4 மணியளவில் சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:

க. சண்முகம்பிள்ளை (மகன்)

அரியாலை,

(28770)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பலவு: 7 - 11 - 1957

உதிர்வு: 05 - 12 - 1993

### அமரர் அன்ரனி சாள்ஸ்

அன்பாக வளர்த்த நீங்கள்
அருகிலே இல்லை என்று
துன்பத்தில் நிறைந்து நாங்கள்
துயரமாய் வாழ்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்

மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(28768)


பாடசாலை மாணவர்களுக்கு

'டொயாட்டோ கோஸ்ரர்' பஸ்வண்டி

மல்லாகத்தில் இருந்து வேம்படி மகளிர் பாடசாலைச்சந்தி, யாழ் சென். பக்றிசஸ் சந்தி, சுண்டிக்குளி மகளிர் பாடசாலை சந்திவரை ஈடுபடுத்தப்பட்டுள்ளது,

பயணம் செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

✱ மது புத்தகசாலை, கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

✱ பவித்திரா பான்சி ஹவுஸ், கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

✱ நித்திய ஸ்பொட், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

✱ சீக்கோ ஹாட்வெயர். கே. கே. எஸ். வீதி, தாவடிச் சந்தி.

✱ தாசன் ஸ்ரூடியோ, கே. கே. எஸ். வீதி, இணுவில்.

(சி-6918)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04 - 01 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org